ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2306/54 - 2022 නොවැම්බර් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.11.17
*2306/54 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.3/2021*(II)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 41(7) ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 71 ஆம் பிரிவின்கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு மற்றும் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2022*, நவெம்பர் *16*.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (கரைகடந்த கம்பனிகளைப் பதிவு செய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### பதிவு செய்தல்

2. *2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் 28 ஆந் திகதிய 2299/46 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களை பதிவு செய்தல், உரிமம், அதிகாரத்தைக் கையளித்தல் மற்றும் ஏனைய அங்கீகாரத்துக்கான ஒழுங்குவிதிகளின்கீழ் கொள்கை ரீதியிலான அங்கீகாரக் கடிதமொன்று வழங்கப்பட்டிருக்கின்றதும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வணிகத்தில் ஈடுபடுவதற்கான கரைகடந்த கம்பனியொன்றாகப் பதிவு செய்யப்படுவதற்குக் கருதுகின்றதுமான கம்பனியொன்று (இவ்வொழுங்குவிதிகளில் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 41(3) ஆம் பிரிவில் குறித்துறைக்கப்பட்டவாறாக ஆவணங்கள், அறிக்கைகள், தகவல்கள் மற்றும் மீளப்பெற முடியாத செய்முறைப்படுத்தல் கட்டணம் என்பவற்றுடன் சேர்த்து அவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் I இல் விண்ணப்பமொன்றினை ஆக்கலாம்.*

3. *விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், ஆணைக்குழுவானது, அத்தகைய விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் ஆணைக்குழுவிற்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகவிருப்பின், கம்பனிகள் சட்டத்தின் பகுதி XI இன் நியதிகளின்படி, கரைகடந்த கம்பனியொன்றாக அத்தகைய கம்பனியினை பதிவு செய்தலை முன்னெடுப்பதற்கு கம்பனிகளின் பதிவாளர் தலைமையதிபதிக்கு பரிந்துரைக்க வேண்டுமென்பதுடன் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வணிகத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்ட கரைகடந்த கம்பனியொன்றாக விண்ணப்பதாரர் கம்பனிக்கு பதிவுச் சான்றிதழை வழங்குதலும் வேண்டும்.*

4\. (1) *கம்பனிகளின் பதிவாளர் தலைமையதிபதி, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வணிகத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்ட கரைகடந்த கம்பனியொன்றாக மூன்று நாட்கள் கொண்ட காலப்பகுதியொன்றிற்குள் அத்தகைய கம்பனியினை பதிவு செய்வதற்கான தேவையான எல்லாப் படிகளையும் எடுக்க வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரர் கம்பனிக்கு வழங்கப்படுவதற்கு, அவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் II இல் அக்கம்பனியின் பெயரில் பதிவுச் சான்றிதழொன்றினை ஆணைக்குழுவுக்கு அனுப்புதல் வேண்டும்.*

(2) *கம்பனிகளின் பதிவாளர் தலைமையதிபதி, (இவ்வொழுங்குவிதிகளில் "இடாப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கரைகடந்த கம்பனிகள்- கொழும்புத் துறைமுக நகர ஆணையக இடாப்பு என அறியப்படும் இடாப்பொன்றினை பராமரிக்க வேண்டுமென்பதுடன் அத்தகைய கம்பனிகளுக்கு பதிவிலக்கமொன்றினை ஒதுக்கீடு செய்தல்.*

5. *ஒழுங்குவிதி 4 இன் கீழ் பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டவுடன், பதிவுச் சான்றிதழானது, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வணிகத்தில் ஈடுபடுவதற்குப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கின்ற அத்தகைய கம்பனிக்கு அத்தகைய கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செல்வதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

6\. (1) *ஒழுங்குவிதி 4 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட கரைகடந்த கம்பனியானது, முப்பது நாட்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள், அவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் III இல் ஆணைக்குழுவுக்கு பின்வரும் சந்தர்ப்பங்களில் அறிவித்தல் வேண்டும்-*

(அ) *ஒழுங்குவிதி 2 இன் கீழ் ஆக்கப்பட்ட விண்ணப்பத்தில் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட விபரங்கள் தொடர்பில் ஏதேனும் மாற்றம் அல்லது திருத்தம் ஏற்படும்போது; அல்லது*

(ஆ) *கம்பனி தொடர்பில் பின்வருவனவற்றில் ஏதேனும் ஏற்படும் போது, அதாவது:-*

(i) *வேறொரு கம்பனியுடன் அல்லது சட்டபூர்வமான நிறுவகத்துடன் ஒன்றுசேர்த்தலொன்று அல்லது ஒருங்கிணைத்தலொன்று;*

(ii) *பங்குகள் அல்லது கூறப்பட்ட மூலதனத்தின் குறைத்தலொன்று;*

(iii) *அது சென்மதியாக உள்ளவாறான கடன்களைச் செலுத்த இயலாமை அல்லது ஒடுக்குதலொன்றினை ஆரம்பித்தல் காரணமாக கடனை செலுத்த இயலாமை;*

(iv) *நிலை மாற்றம்;*

(v) *பெயர் மாற்றம்;*

(vi) கொள்ளுதல் அல்லது கொள்ளுதலுக்கான உடன்படிக்கையொன்றுக்கு முன்னதாக கம்பனியின் சொத்துக்களின் அரைவாசி பெறுமதிக்கும் மேற்பட்ட பெறுமதியொன்றின் சொத்துக்களைக் கொள்ளுதல் அல்லது கொள்ளுதலுக்கான உடன்படிக்கையொன்று தற்செயலானதாயினுஞ்சரி அல்லாவிட்டாலுஞ்சரி;

(vii) அத்தகைய கம்பனியின் சொத்துக்களின் பெறுமதியில் முழுவதுமான அல்லது அரைவாசிக்கும் அதிகமானவற்றை கையுதிர்த்தல் அல்லது கையுதிர்த்தலுக்கான உடன்படிக்கையொன்று தற்செயலானதாயினுஞ்சரி அல்லாவிட்டாலுஞ்சரி;

(viii) அத்தகைய கொள்ளல் உரிமைகள் அல்லது நலன்கள் அல்லது உறப்படும் கடப்பாடுகள் அல்லது பொறுப்புக்களுக்கு முன்னதாக சொத்துக்களின் பெறுமதியில் அரைவாசிக்கும் மேற்பட்ட பெறுமதியைக் கொள்ளல் உரிமைகள் அல்லது நலன்கள் அல்லது உறப்படும் கடப்பாடுகள் அல்லது பொறுப்புக்கள் உடைய அத்தகைய கம்பனிகள் கொண்டுள்ள அல்லது கொண்டிருக்க வேண்டிய பரிமாற்றம்;

(ix) ஏற்புடைய சட்டத்திற்கேற்ப, அத்தகைய கம்பனியின் கூட்டிணைந்த நாட்டின் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு ஒப்பான செயற்பாடுகளை ஆற்றும் இயைபான ஒழுங்குறுத்துகை அதிகாரசபை அல்லது அதிகாரசபைகளது அங்கீகாரம், ஒப்புதல், அனுமதி அல்லது ஒருப்பாடினை பெறுவதனை தேவைப்படுத்தும் அத்தகைய கம்பனிகள் குறித்த ஏனைய விடயங்கள்: அல்லது

(x) ஏற்புடைய சட்டத்திற்கேற்ப, அத்தகைய கம்பனியின் கூட்டிணைந்த நாட்டின் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு ஒப்பான செயற்பாடுகளை ஆற்றும் இயைபான ஒழுங்குறுத்துகை அதிகார சபை அல்லது அதிகார சபைகளுக்கு வழங்கப்படவேண்டிய அறிவித்தல் குறித்த ஏனைய விடயங்கள்.

(2) ஆணைக்குழுவானது, உப ஒழுங்குவிதி (1) இன் கீழ் அதனால் பெற்ற தகவல்களை கம்பனிகளின் பதிவாளர் தலைமையதிபதிக்கு தாமதமின்றி அறிவத்தல் வேண்டும்.

7. (1) ஒழுங்குவிதி 6 இன் கீழ் அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், கம்பனிகளின் பதிவாளர் தலைமையதிபதி, இடாப்பொன்றிலுள்ள தகவல்களைத் தேவைப்படும் முறைமையில் நாளதுவரையாக்கும்படி கோரலாம்.

(2) இடாப்பில் தகவல்களை நாளதுவரையாக்கலானது, அத்தகைய கரைகடந்த கம்பனி தொடர்பில் கம்பனிகளின் பதிவாளர் தலைமையதிபதியினால் பராமரிக்கப்படும் ஏனைய பதிவுகளுக்கு ஏதேனும் மாற்றங்களுக்கு மேலதிகமாக இருக்க வேண்டுமென்பதுடன் பங்கமெதுவும் இல்லாதிருக்கவும் வேண்டும்.

8. ஒழுங்குவிதி 4 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட அதனது வணிகத்தைத் தொடர உத்தேசித்திருக்கின்ற கரைகடந்த கம்பனியொன்று, இச்சட்டத்தின் 41 (9) ஆம் பிரிவிற்கேற்ப, 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் 28 ஆந் திகதிய 2299/47 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களைப் பதிவு செய்தல் மற்றும் உரிமமளித்தலுக்கான (கட்டணம்) ஒழுங்குவிதியில் அதன் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் IV இல் குறித்துரைக்கப்பட்டவாறான வருடாந்த கட்டணத்தை செலுத்தியமைக்கான எண்பிப்பினை கம்பனிகளின் பதிவாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## பகுதி II

### பதிவை இரத்துச்செய்தல்

9. (1) ஒழுங்குவிதி 4 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட கரைகடந்த கம்பனியொன்று தனது வணிகத்தை நிறுத்திக்கொள்ள உத்தேசிக்கின்றவிடத்து, அத்தகைய கரைகடந்த கம்பனியானது அறிவுறுத்தலொன்றினை இதன் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் V இல் ஆணைக்குழுவிற்கு அனுப்புதல் வேண்டும்.

(2) உப ஒழுங்குவிதி (1) இன் கீழ் அறிவித்தல் கிடைத்தவுடன், ஆணைக்குழுவானது, அத்தகைய கரைகடந்த கம்பனிக்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளாக வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்வதுடன், இடாப்பொன்றிலிருந்து கரைகடந்த கம்பனியின் பெயரை நீக்குவதற்காக அத்தகைய அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

*10.* சந்தேகத்தினைத் தவிர்ப்பதற்காக, கரைகடந்த கம்பனியொன்றாக சட்டத்தின் பகுதி VII இன் கீழ் பதிவு செய்திருக்கின்ற கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பனியானது இடாப்பிலிருந்து பதிவினை இரத்துசெய்தல் மற்றும் அதன் பெயரினை நீக்குதல் என்பன எது எவ்வாறிருப்பினும், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் கூட்டிணைக்கப்பட்டதுமான கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக தொடரும் என இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

## பகுதி III

### பொருள்கோடல்

*11.* இவ்வொழுங்குவிதிகளில்-

“ஆணைக்குழு” என்பது, இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு எனப் பொருள்படும்; அத்துடன்

“கம்பனிகள் சட்டம்” என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம் எனப் பொருள்படும்.

### அட்டவணை

(ஒழுங்குவிதி 2)

### படிவம் I

### பதிவுக்கான படிவம்

(கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிலும் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த கம்பனியொன்றாக வணிகத்தில் ஈடுபடுவதற்கு பதிவு செய்தலுக்காக- இச்சட்டத்தின் 41(2) ஆம் பிரிவு)

| | |
|---|---|
| கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிப்பிலக்கம்: | |

| | | |
|---|---|---|
| 01 | கம்பனியின் பெயர்: | |

| | | |
|---|---|---|
| 02 | கம்பனியொன்று வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்டிருப்பின்- | |

| | |
|---|---|
| (அ) | கூட்டிணைக்கப்பட்ட நாட்டில் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அல்லது முதன்மை அலுவலகத்தின் முகவரி: |
| (ஆ) | இலங்கையிலுள்ள கம்பெனியின் அலுவலக முகவரி (கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பில்) |

| | | |
|---|---|---|
| 03 | பணிப்பாளர்களின் அல்லது கம்பனியின் அலுவல்களை முகாமை செய்கின்றவர்களின் விபரங்களின் பட்டியல்: | |
| | முழுப் பெயர்: | |
| | கடவுச் சீட்டிலக்கம்:<br>(வழங்கிய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக)<br>தேசிய அடையாள அட்டை இல.:<br>(இலங்கையர்களுக்காக) | |

| | |
|---|---|
| முகவரி | |
| தொழில் | |
| பதவி | |

04 கம்பனியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட இலங்கையில் வதிகின்ற மற்றும் பிரசைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகளின் பட்டியல் (வெளிநாட்டில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட கம்பனிகளுக்கு மாத்திரம் தேவைப்படுத்தப்படுகின்றது.)

| | | | |
|---|---|---|---|
| முழுப் பெயர்: | | | |
| கடவுச் சீட்டிலக்கம்:<br>(வழங்கிய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக)<br>தேசிய அடையாள அட்டை இல.:<br>(இலங்கையர்களுக்காக) | | | |
| முகவரி | | | |
| தொழில் | | | |

| | |
|---|---|
| பணிப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் முழுப்பெயர்: | |

| | |
|---|---|
| பணிப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் கையொப்பம்: | |

| | | | |
|---|---|---|---|
| மாற்றத்தின் திகதி | (நாள்) | (மாதம்) | (வருடம்) |

| | | | |
|---|---|---|---|
| சமர்ப்பித்தவர்: | பெயர்: | | |
| | பதவி: | | |
| | முகவரி: | | |
| | மின்னஞ்சல்: | | |
| | தொலைபேசி: | | |
| | கையடக்கத் தொலைபேசி: | | |

கம்பனியின் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்:

(i) பட்டயம், நியதிச்சட்டம் அல்லது அமைப்பக விதிகளின் அல்லது கம்பனியை அமைத்துருவாக்குகின்ற அல்லது அதன் அமைத்துருவாக்கத்தை வரைவிலக்கணம் செய்கின்ற அத்தகைய வேறு சாதனத்தின் எண்பிக்கப்பட்ட பிரதியொன்று (அத்தகைய ஆவணம் இலங்கையின் அரசகரும மொழியொன்றில் அல்லது ஆங்கிலத்தில் இல்லாதவிடத்து, அவ்வாவணத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பொன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

(ii) கம்பனியானது வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்டிருக்குமிடத்து, படிவம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் முப்பது நாட்களுள் (30) வழங்குகின்ற அதிகாரியினால் எண்பிக்கப்பட்ட கூட்டிணைப்புச் சான்றிதழின் பிரதியொன்று.

(iii) அத்தகைய கம்பனி கரைகடந்த கம்பனியொன்றாக வணிகத்தைக் கொண்டுநடாத்த பதிவு செய்யப்படுவதற்கு அத்தகைய கம்பனியின் கூட்டிணைக்கப்பட்ட நாட்டில் சட்டத் தடைகள் எவையுமில்லை என்ற பயன்பட, கம்பனியினால் வழங்கப்பட்ட முறையாக மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட கூற்றொன்று;

(iv) கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுக்கான செய்முறைப்படுத்தற் கட்டணத்தை எண்பிக்கும் கொடுப்பனவின் பற்றுச்சீட்டுப் பிரதி.

**படிவம் II**

[ஒழுங்குவிதி 4(1)]

**பதிவுச் சான்றிதழ்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

| | | |
|---|---|---|
| கம்பனியின் இலக்கம் | PCC | |

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்

| |
|---|
| (பிரிவு 41 இற்கு ஏற்ப) கரைகடந்த கம்பனியின் பதிவுச் சான்றிதழ் |

கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிலும் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வணிகத்தில் ஈடுபடுவதற்கு 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 41 இன் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரையின்மேல், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பகுதி XI இற்கு ஏற்ப, இலங்கையில் ஒரு கரைகடந்த கம்பனியொன்றாக ....................................................................... ........................................... பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

| |
|---|
| |

கம்பனிகளின் பதிவாளர் தலைமையதிபதி

**படிவம் III**

[ஒழுங்குவிதி 6(1)]

**விபரங்களின் மாற்றம் அல்லது திருத்தத்தினை அறிவித்தல்**

*(கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிலும் இடப்பரப்பிலிருந்தும் வணிகத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்ட கரைகடந்த கம்பனியொன்றாகப் பதிவு செய்வதற்காக விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விபரங்களை மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு - இச்சட்டத்தின் பிரிவு 41(4))*

| | |
|---|---|
| கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு குறிப்பிலக்கம்: | |

| | | |
|---|---|---|
| *01* | *கம்பனியின் பெயர்:* | |

*02* *கம்பனியின் பட்டயம், நியதிச்சட்டம், குறிப்பு அல்லது அமைப்பக விதிகளின் அல்லது கம்பனியை அமைத்துருவாக்குகின்ற அல்லது அதன் அமைத்துருவாக்கத்தை வரைவிலக்கணம் செய்கின்ற அத்தகைய வேறு சாதனத்தின் மாற்றம் அல்லது திருத்தத்தின் அறிக்கையை வழங்குதல்:*

| *மாற்றத்தின் திகதி* | *(நாள்)* | *(மாதம்)* | *(வருடம்)* |
|---|---|---|---|
| | | | |

*(மாற்றப்பட்ட கம்பனியின் பட்டயம், நியதிச்சட்டம், குறிப்பு அல்லது அமைப்ப கவிதிகளின் அல்லது கம்பனியை அமைத்துருவாக்குகின்ற அல்லது அதன் அமைத்துருவாக்கத்தை வரைவிலக்கணம் செய்கின்ற அத்தகைய வேறு சாதனத்தின் எண்பிக்கப்பட்ட பிரதியொன்றை இணைக்கவும். அத்துடன் அத்தகைய சாதனம் அரசகரும மொழியொன்றில் அல்லது ஆங்கிலத்தில் இல்லாதவிடத்து, அச்சாதனத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பொன்றையும் இணைக்கவும்.)*

*03* *பணிப்பாளர்களின் அல்லது கம்பனியின் அலுவல்களை முகாமை செய்கின்றவர்களின் அல்லது அவர்களின் விபரங்களின் மாற்றம் அல்லது திருத்தத்தை அறிக்கையிடல்:*
*(தோதான கூண்டினுள் ✓ என்ற குறியீட்டை இடுவதன் மூலம் இவ்வறிவித்தலுக்கான நோக்கத்தைக் குறிப்பிடவும்)*

*(அ)* *பணிப்பாளரின் மற்றும்/அல்லது பணிப்பாளர்களின் விபரங்களின் மாற்றம்* ☐

*(ஆ)* *ஏனைய முகாமை அலுவலர்கள் மற்றும்/அல்லது அத்தகைய அலுவலர்களின் விபரங்களின் மாற்றம்* ☐

*பதவி வகிப்பதிலிருந்து நிறுத்துதல்:*

| | |
|---|---|
| *முழுப் பெயர்:* | |
| *பதவி* | |
| *கடவுச் சீட்டிலக்கம்:*<br>*(வழங்கிய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக)*<br><br>*தேசிய அடையாள அட்டை இல:*<br>*(இலங்கையர்களுக்காக)* | |
| *முகவரி:* | |
| *பதவியை நிறுத்துகின்ற திகதி:*<br>*(நாள்/மாதம்/வருடம்)* | |
| *காரணம்* | |

*புதிய பணிப்பாளர்கள் அல்லது ஏனைய முகாமை அலுவலர்களின் நியமனம்:*

| | |
|---|---|
| *முழுப் பெயர்:* | |
| *பதவி:* | |

| | |
|---|---|
| கடவுச் சீட்டிலக்கம்:<br>(வழங்கிய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக)<br><br>தேசிய அடையாள அட்டை இல.:<br>(இலங்கையர்களுக்காக) | |
| முகவரி: | |
| கம்பனியில் அவர்கள் வகிக்கின்ற பதவி: | |
| நியமனத் திகதி:<br>(நாள்/மாதம்/வருடம்) | |

தற்போது இருக்கின்ற பணிப்பாளர்கள் அல்லது ஏனைய முகாமை அலுவலர்களின் விபரங்களின் மாற்றம் (விபரங்கள் ஏற்புடையதாக இருந்தால் மாத்திரம் பூர்த்தி செய்க)

| | |
|---|---|
| புதிய பெயர்: | |
| முந்தைய பெயர் | |
| புதிய கடவுச்சீட்டு/ தே.அ.அ.இல. | |
| புதிய முகவரி | |
| முந்தைய முகவரி | |
| புதிய பதவி | |
| முந்தைய பதவி | |

| மாற்றத்தின் திகதி | (நாள்) | (மாதம்) | (வருடம்) |
|---|---|---|---|
| | | | |

04 இலங்கையில் கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் மற்றும் அவர்களின் விபரங்களின் மாற்றம் அல்லது திருத்தத்தை அறிக்கையிடுதல்:

*(தோதான கூண்டினுள் ✓ என்ற குறியீட்டை இடுவதன் மூலம் இவ்வறிவித்தலுக்கான நோக்கத்தைக் குறிப்பிடவும்.)*

(அ) அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் மாற்றம் ☐

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் விபரங்களின் மாற்றம் ☐

அத்தகைய அதிகாரத்தை வகிப்பதிலிருந்து நிறுத்தப்படுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி

| | |
|---|---|
| முழுப் பெயர்: | |
| பதவி: | |
| கடவுச் சீட்டிலக்கம்:<br>(வழங்கிய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக)<br>தேசிய அடையாள அட்டை இல.:<br>(இலங்கையர்களுக்காக) | |

| | |
|---|---|
| முகவரி: | |
| பதவி நிறுத்தப்படுகின்ற திகதி: (நாள்/மாதம்/வருடம்) | |
| காரணம்: | |

புதிய அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் நியமனம்:

| | |
|---|---|
| முழுப் பெயர்: | |
| கடவுச் சீட்டிலக்கம்: (வழங்கிய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக) தேசிய அடையாள அட்டை இல.: (இலங்கையர்களுக்காக) | |
| முகவரி: | |
| தொழில்: | |
| நியமனத் திகதி: | |

அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் விபரங்களின் மாற்றம் (விபரங்கள் ஏற்புடையதாக இருந்தால் மாத்திரம் பூர்த்தி செய்க)

| | |
|---|---|
| புதிய பெயர்: | |
| முந்தைய பெயர் | |
| புதிய கடவுச்சீட்டு/ தே.அ.அ.இல. | |
| புதிய முகவரி | |
| முந்தைய முகவரி | |
| புதிய பதவி | |
| முந்தைய பதவி | |

| மாற்றத்தின் திகதி | (நாள்) | (மாதம்) | (வருடம்) |
|---|---|---|---|
| | | | |

05 கூட்டிணைக்கப்பட்ட நாட்டில் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அல்லது முதன்மை அலுவலகத்தின் அமைவிடத்தின் மாற்றம் அல்லது திருத்தத்தினை அறிக்கையிடுதல்:

| | |
|---|---|
| முந்தைய முகவரி | |
| புதிய முகவரி | |

| மாற்றத்தின் திகதி | (நாள்) | (மாதம்) | (வருடம்) |
|---|---|---|---|
| | | | |

06 இலங்கையில் கம்பனியின் அலுவலகத்தின் அமைவிடத்தின் மாற்றம் அல்லது திருத்தத்தினை அறிக்கையிடுதல்: (கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பில்)

| | |
|---|---|
| முந்தைய முகவரி | |
| புதிய முகவரி | |

| மாற்றத்தின் திகதி: | (நாள்) | (மாதம்) | (வருடம்) |
|---|---|---|---|
| | | | |

07 இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் மாற்றம் அல்லது திருத்தத்தினை அறிக்கையிடுதல்:

| மாற்றத்தின் திகதி: | (நாள்) | (மாதம்) | (வருடம்) |
|---|---|---|---|
| | | | |

| | |
|---|---|
| பணிப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் முழுப் பெயர் | |
| பணிப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம் | |

| மாற்றத்தின் திகதி: | (நாள்) | (மாதம்) | (வருடம்) |
|---|---|---|---|
| | | | |

| | | |
|---|---|---|
| சமர்ப்பித்தவர்: | பெயர்: | |
| | பதவி: | |
| | முகவரி: | |
| | மின்னஞ்சல்: | |
| | தொலைபேசி: | |
| | கையடக்கத் தொலைபேசி: | |

## படிவம் IV

(ஒழுங்குவிதி *8*)

### வருடாந்தக் கட்டணத்தைச் செலுத்தியமைக்கான எண்பிப்பு

| | |
|---|---|
| கம்பனியின் பதிவிலக்கம்: | |

| | |
|---|---|
| கம்பனியின் பெயர்: | |

| | |
|---|---|
| வருடாந்தக் கட்டணம் (ஐக்கிய அமெரிக்க டொலர்களில்) | |

| | | | | |
|---|---|---|---|---|
| செலுத்திய முறைமை | *தோதான கூண்டினுள் ✓ என்ற குறியீட்டை இடுவதன் மூலம் முறைமையைக் குறிப்பிடுக* | | | செலுத்தியமைக்கான எண்பிப்புக் (கொடுப்பனவை உறுதிப்படுத்தல் குறிப்பிலக்கம்) |
| | இயங்கலை முறைமை | வங்கிப் பரிவர்த்தனை | ☐ | |
| | | இணையத்தளக் கொடுப்பனவுத் தளம் | ☐ | |

| செலுத்தப்பட்ட திகதி: | (நாள்) | (மாதம்) | (வருடம்) |
|---|---|---|---|
| | | | |

| | |
|---|---|
| பணிப்பாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் முழுப் பெயர் | |

| | |
|---|---|
| பணிப்பாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம் | |

| செலுத்தப்பட்ட திகதி: | (நாள்) | (மாதம்) | (வருடம்) |
|---|---|---|---|
| | | | |

| | | |
|---|---|---|
| சமர்ப்பித்தவர்: | பெயர்: | |
| | பதவி: | |
| | முகவரி: | |
| | மின்னஞ்சல்: | |
| | தொலைபேசி: | |
| | கையடக்கத் தொலைபேசி: | |

## படிவம் V

[ஒழுங்குவிதி *9(1)*]

### வணிகத்தை நடத்துவதிலிருந்து நிறுத்துவற்கான அறிவித்தல்

*((கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிலும் இடப்பரப்பிலிருந்தும் வணிகத்தில் ஈடுபடுவதனை நிறுத்துவதற்கான அறிவித்தல் - இச்சட்டத்தின் பிரிவு 41(10))*

| | |
|---|---|
| கம்பனியின் பதிவிலக்கம்: | |

| | |
|---|---|
| கம்பனியின் பெயர்: | |

| | |
|---|---|
| கூட்டிணைக்கப்பட்ட நாடு: | |

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனி கீழே குறிப்பிடப்பட்ட திகதியில் வணிகத்தை நிறுத்திக் கொள்கின்றது.

| நிறுத்துகின்ற திகதி: | (நாள்) | (மாதம்) | (வருடம்) |
|---|---|---|---|
| | | | |

| | |
|---|---|
| பணிப்பாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் முழுப் பெயர் | |

| | |
|---|---|
| பணிப்பாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம் | |

| | | |
|---|---|---|
| சமர்ப்பித்தவர்: | பெயர்: | |
| | பதவி: | |
| | முகவரி: | |
| | மின்னஞ்சல்: | |
| | தொலைபேசி: | |
| | கையடக்கத் தொலைபேசி: | |

EOG 12- 0185

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.